# பிற்படுத்தப்பட்டோர்,
# மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
# சிறுபான்மையினர் நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 9

# அறிவிப்புகள்
# 2015–2016

திரு. எஸ். அப்துல் ரஹீம்
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நலத்துறை அமைச்சர்

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## புதிய அறிவிப்புகள் 2015 – 16

### 1. புதிதாக 10 கல்லூரி விடுதிகள் துவங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் நலனுக்காக 5 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், 3 மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், 1 சீர்மரபினர் நல விடுதி மற்றும் 1 சிறுபான்மையினர் நல விடுதி என மொத்தம் 10 புதிய கல்லூரி விடுதிகள், 1,000 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் மொத்தம் 2 கோடியே 82 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் துவங்கப்படும்.

## 2. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் மின் பழுது உள்ளிட்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் மின் பழுது உள்ளிட்ட பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக **2** கோடி ரூபாய் வழங்கப்படும்.

## 3. தர்மபுரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் ஒரு கண்காணிப்பாளர் பணியிடம் தோற்றுவித்தல்

ஒருங்கிணைந்த தர்மபுரி மாவட்டத்திலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் பிரிக்கப்பட்டபோது, தர்மபுரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் ஒப்பளிக்கப்பட்ட கண்காணிப்பாளர் பணியிடம் உள்ளிட்ட சில பணியிடங்கள் கிருஷ்ணகிரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திற்கு மாற்றப்பட்டன. தற்போதைய நிலையில் தர்மபுரி மாவட்டத்தில் கண்காணிப்பாளர் பணியிடம் இல்லை. எனவே, தர்மபுரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஏதுவாக, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ஒரு கண்காணிப்பாளர் பணியிடம் **6** இலட்சத்து **79** ஆயிரம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

## 4. சிறந்த தனியார் பள்ளிகளில் 11 மற்றும் 12ம் வகுப்பு பயில்வதற்கு நிதி உதவி வழங்கும் திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பினை ரூபாய் 1 இலட்சத்திலிருந்து ரூபாய் 2 இலட்சமாக உயர்த்துதல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு பள்ளிகளில் படித்து 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 3 மாணவர், 3 மாணவியர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர் மற்றும் 2 மாணவியருக்கு (மொத்தம் 10 மாணவ / மாணவியருக்கு) அவர்கள் விருப்பப்படி தமிழகத்தில் உள்ள சிறந்த தனியார் மேல்நிலைப்பள்ளிகளில் சேர்ந்து மேல்நிலைக் கல்வியை தொடர அரசால், நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 1 இலட்சத்திலிருந்து ரூபாய் 2 இலட்சமாக உயர்த்தப்படும்.

## 5. 5 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு தளவாடச் சாமான்கள் (Furniture) வழங்குதல்

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் நலனுக்காக 290 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள் புதியதாக நிலை உயர்த்தப்பட்ட, 5 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** 9 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் தளவாடச் சாமான்கள் (Furniture) வழங்கப்படும்.

**எஸ். அப்துல் ரஹீம்**
**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்**